



# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®




ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 184 | உள்ளூர் - 03.07.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 184 | வெளியூர் - 04.07.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

ஐபிபிஎஸ் வங்கி: பட்டதாரிகளுக்கு பொன்னான வாய்ப்பு!

உங்கள் முகமும் உடலும்... லக்னம் சொல்லும் ரகசியம்!

பிஎப் விதிகளில் 4 புதிய மாற்றங்கள்!

கோவில்களில் முறைகேடா? புகார் அளிக்கலாம்!!

## இந்தியா-ஜப்பான் கூட்டணி பலம்: ரூ.35,000 கோடி கார் தொழிற்சாலை தொடக்கம்!

புதுடெல்லி, ஜூலை 03–

இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்க ஜப்பான் பிரதமர் சனே டகாய்ச்சி



மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்தார். பிரதமர் நரேந்திர மோடியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு (ஏஐ), மருந்து உற்பத்தி, மருத்துவ உபகரணங்கள், உயிரித் தொழில்நுட்பம், நிதிச் சேவைகள், பசுமை ஹைட்ரஜன், பேட்டரி, அணுசக்தி, கப்பல் கட்டுமானம் மற்றும் விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தியா ஜப்பான் பயோ கேஸ் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,000 பயோ கேஸ் மற்றும் இயற்கை உரத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

இந்தியாவின் கச்சா எண்ணெய் கையிருப்பை அதிகரிக்கவும், எரிசக்தி பாதுகாப்பு மற்றும் அரிய கனிம வள மேம்பாட்டுக்கும் ஜப்பான் தொழில்நுட்ப உதவி வழங்க ஒப்புக்கொண்டது. மேலும், இரு நாடுகளின் கடற்படைகளும் இணைந்து போர்ப் பயிற்சி நடத்துவதுடன், ஆயுத உற்பத்தியிலும் ஒத்துழைப்பு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், ‘இந்தியாவில் தயாரிப்போம்’ திட்டத்தில் போர்க் கப்பல்களுக்கான நவீனசிறப்பு ஆன்டெனாக்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட உள்ளன. எதிர்காலத்தில் இணைந்து போர்க் கப்பல்கள் தயாரிக்கவும் இரு நாடுகளும் கொள்கை ரீதியாக உடன்பட்டுள்ளன.

ஹரியானாவின் கார்கோடாவில் ரூ.35,000 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாருதி சுசூகி கார் தொழிற்சாலையை பிரதமர் மோடியும், ஜப்பான் பிரதமரும் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தனர். 800 ஏக்கரில் அமைந்துள்ள இந்த ஆலை, உலகின் மிகப்பெரிய கார் உற்பத்தி மையங்களில் ஒன்றாகும். முதல் கட்டத்தில் ஆண்டுக்கு 5 லட்சம் கார்கள் தயாரிக்கப்படும்; பின்னர் இது 10 லட்சமாக உயர்த்தப்படும். மும்பை அகமதாபாத் புல்லட் ரயில் திட்டத்துக்கான தொழில்நுட்ப உதவியை ஜப்பான் தொடர்ந்து வழங்கும் என்றும், மணிக்கு 320400 கி.மீ. வேகத்தில் இயங்கும் அடுத்த தலைமுறை இ–10 ஷிங்கன்சென் ரயில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மேலும், இந்திய ரூபாய் ஜப்பான் யென் கரன்சிகளில் நேரடி வர்த்தகத்தை விரிவுபடுத்த இரு நாடுகளும் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளன. மாநாட்டின்போது, பிரதமர் மோடி ஜப்பான் பிரதமர் சனே டகாய்ச்சியை “எனது தங்கை” என்று குறிப்பிட்டதற்கு, அவர் “பிரதமர் மோடி என் அண்ணன்” என்று நெகிழ்ச்சியுடன் பதிலளித்தது கவனம் பெற்றது.

## அடுத்த வாரம் நியூசிலாந்து செல்கிறார் பிரதமர் மோடி!

புதுடில்லி, ஜூலை. 03–

அடுத்த வாரம் நியூசிலாந்துக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்கிறார். அப்போது இந்தியா– நியூசிலாந்து இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இது குறித்து நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இந்தியப் பிரதமர் மோடி அடுத்த வாரம் நியூசிலாந்திற்குத் தனது முதல் அதிகாரப்பூர்வப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியா உலகின் மிகப்பெரிய மற்றும் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாகும்; மேலும் நியூசிலாந்தின் பொருளாதார செழிப்பிற்கு மிகவும் முக்கியமான நாடாகவும் அது திகழ்கிறது. ஏப்ரல் மாதம் கையெழுத்தான நியூசிலாந்து–இந்தியா இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையிலான உறவு வலுவடைந்தது.

இந்த ஒப்பந்தம் நியூசிலாந்திற்கு அதிக வேலைவாய்ப்புகள், ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும். இது 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய சந்தையில் ஏற்றுமதியை அதிகரிக்கப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும்; இதன் மூலம் நியூசிலாந்து சமூகங்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதோடு, வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு ஊதியமும் உயரும். இவ்வாறு கிறிஸ்டோ பர் லக்சன் கூறினார்.

## மாஜி அமைச்சர் வைகை செல்வன் அ.தி.மு.க.வில் இருந்து விலகல்!

சென்னை, ஜூலை. 03–

முன்னாள் அமைச்சர் வைகை செல்வன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகிக் கொள்கிறேன்.

ஒரு தலைவர் தானே அழிந்தால் கூட தனது கொள்கைகளும், இயக்கமும் வெற்றி பெற வேண்டும் என நினைப்பார்கள். ஆனால், இயக்கமும், கழகத் தொண்டர்களும் அழிந்தால் கூட தான் மட்டுமே நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர் நல்ல தலைவராக இருப்பதில்லை.

திமுகவோடு இணைந்து ஆட்சியமைக்க திட்டமிட்டதன் மூலம், திமுக எதிர்ப்பு நிலையில் இருந்து அதிமுக சமரச போக்கில் போனதால் தனது அடையாளத்தை இழந்து விட்டது. சரியான நேரத்தில் தவறான முடிவெடுப்பதன் காரணமாகவும், தனது வெற்றிப் பாதையில் இருந்து அதிமுக விலகிச் சென்று விட்டது.

மேலும், தேர்தல் களத்தில் நான் தனித்து விடப்பட்ட நிலையிலும் கூட, கழகத்திற்காக தேர்தல் பரப்புரையாற்றினேன். ஆனால், மரணத்தை விடக் கொடியது புறக்கணிப்பு என்பதை நான் உணாந்து கொண்டேன்.



ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று

மதியாதவரின் பின் சென்று ஒருவன் உயிர் வாழ்வதைவிட, அவ்வாறு செய்யாததால் கெட்டான் என்று சொல்லப்படுதல் நன்று வல்லுவ பேராசானின் வார்த்தைகளுக்கு நான் கீழ் படிகிறேன். என்கிற மாணவப் பருவம் தொட்டு ரத்தமும், சதையுமாக இருந்து இந்த இயக்கத்தோடு பணியாற்றி தற்போது விலக வேண்டிய சூழ்நிலையை எண்ணிப் பார்க்கையில், என் மனதில் ஏற்படும் கடுமையான வலியை வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை.

நேரம் வருகிற போது இன்னும் இதுகுறித்து பேசுகிறேன்.

‘புதிய இடத்தில் நடுவதற்கு புடுங்கிப் போன செடியில் இருக்கும் பழைய மண்ணைப் போல’ இந்த இயக்கத்திற்காக ஆற்றிய என் பழைய நினைவுகளை என்ன செய்வது என்று எனக்கே தெரியவில்லை. இவ்வாறு கூறியுள்ளார்.

### நீட் – ஜே.இ.இ. சேர்க்கை


# புதிய ஃபார்முலா?

## பிளஸ்-2 மதிப்பெண்ணுக்கு 50% வெயிட்டேஜ்

### மனஅழுத்தம் குறைக்க பரிசீலனை!!

புதுடெல்லி, ஜூலை. 03–

மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கை முறையில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வருவது குறித்து மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இதன்படி, நீட் (NEET) மற்றும் ஜே.இ.இ. (JEE) நுழைவுத் தேர்வுகளுடன், பிளஸ்–2 பொதுத் தேர்வு மதிப்பெண்களுக்கும் 50 சதவீத முக்கியத்துவம் வழங்கும் நடைமுறைஆய்வில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



தற்போதைய நடைமுறையில், மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கை பெரும்பாலும் நுழைவுத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே நடைபெறுகிறது. இதனால், பள்ளிப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களின் கல்வித் திறனுக்கு போதிய முக்கி யத்துவம் கிடைப்பதில்லை என்ற கருத்து நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில், பள்ளிக் கல்விக்கும் நுழைவுத் தேர்வுக்கும் சமநிலை ஏற்படுத்தும் வகையில், பொதுத் தேர்வு மதிப்பெண்களுக்கு 50% வரை முக்கியத்துவம் வழங்குவது, நுழைவுத் தேர்வு பாடத்திட்டத்தை பள்ளிப் பாடத்திட்டத்துடன் மேலும் நெருக்கமாக இணைப்பது, மாணவர்களுக்கு பல முறை தேர்வு எழுதும் வாய்ப்பு வழங்குவது மற்றும் எதிர்காலத்தில் கணினி வழி தேவைக்கேற்ப நடைபெறும் தேர்வு முறையை அறிமுகப்படுத்துவது போன்ற பரிந்துரைகள் ஆலோசனையில் உள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளில் நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக எழுந்த வினாத்தாள் கசிவு, மதிப்பீட்டு சர்ச்சைகள் மற்றும் பயிற்சி மையங்களின் மீதான அதிக சார்பு போன்ற பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, தேர்வு முறையை மேலும் வெளிப்படையாகவும் மாணவர் நட்பாகவும் மாற்றும் நோக்கில் இந்த மாற்றங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.


எனினும், இந்த பரிந்துரைகள் இன்னும் ஆலோசனை நிலையிலேயே உள்ளன. இதுகுறித்து மத்திய அரசு அல்லது கல்வி அமைச்சகம் இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை. குழுவின் இறுதி அறிக்கை கிடைத்த பிறகே இறுதி முடிவு எடுக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உக்ரைன் தாக்குதலுக்கு ரஷியா பதிலடி; 21 பேர் பலி!

கீவ், ஜூலை. 03–

உக்ரைன் தாக்குதலுக்கு பதிலடியாக ரஷியா நடத்திய தாக்குதலில் 21 பேர் பலியாகி உள்ளனர்.

ரஷியாவின் மாஸ்கோ நகரில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு மையங்கள் மீது உக்ரைன் தாக்கியது. இதற்கு பதிலடி தரும் வகையில், டிரோன் மற்றும் ஏவுகணை கொண்டு ரஷியா தாக்கியது.



11 மணிநேரம் தாக்குதல்

இதில், 74 ஏவுகணைகளும், 496 டிரோன்களும் பயன்படுத்தப்பட்டன. ஏறக்குறைய 11 மணிநேரம் நடந்த இந்த தாக்குதலில், கீவ் நகரில் 21 பேர் பலியானார்கள். 90 பேர் காயமடைந்தனர்.

உக்ரைனுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை என்ற பெயரில் 2022–ம் ஆண்டு பிப்ரவரியில் ரஷியா தொடங்கிய போரானது, 4 ஆண்டுகளை கடந்தும் நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை வழங்கின.

ரஷியாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது. போரால் வீரர்கள் உள்பட இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டும், வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடியும் விட்டனர்.

போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபட்டது. அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்ற பின்னர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன்படி, ரஷிய அதிபர் விளாடிமிர் புதினுடன், டிரம்ப் பேசினார். எனினும், பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகவில்லை. இதனால், இரு நாடுகளுக்கு இடையேயான போரானது தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த சூழலில், உக்ரைன் தாக்குதலுக்கு ரஷியா பதிலடி அளித்துள்ளது. இதுபற்றி ரஷிய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், நீண்ட ரக ஏவுகணைகளை கொண்டு சமீபத்தில் உக்ரைன் நடத்திய தாக்குதலால், ரஷியாவில் கடுமையாக எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. அதிபர் புதினுக்கும் நெருக்கடி ஏற்படுத்தி உள்ளது. இதற்கு பதிலடி தரப்பட்டு உள்ளது என தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

வெள்ளிக்கிழமை 03.07.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆனி மாதம் 19-ம் தேதி

# இந்திய வங்கிகளுக்கு பயத்தை காட்டும் மைதோஸ்.. இனி ஒவ்வொரு நாளுக்கும் திக் திக்..!



செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வங்கி சேவையை எளிதாக்கி, மேம்படுத்தினாலும், விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு வரவுள்ள கிளாட் மைதோஸ் ஏஐ மாடல் இந்திய நிதியமைப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என அறியப்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஜூன் மாத FSR அறிக்கையில் ஏஐ அச்சுறுத்தல் மிகப்பெரிய பிரச்சனையாக அறிவித்துள்ளது.

இதுநாள் வரையில் மக்கள் தங்களுக்காக ஒரு வங்கியைத் தேர்வு செய்யும்போது, வட்டி விகிதம், சேவை தரம், வங்கி கிளையில் இருக்கும் வசதிகள் போன்றவற்றை பார்த்தே பெரும்பாலானோர் தங்களுடைய வங்கியை தேர்வு செய்வார்கள். ஆனால் தற்போது வங்கியில் எந்த அளவுக்கு சைபர் பாதுகாப்பில் மேம்பட்டதாக இருக்கிறது என்பதை பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி FSR அறிக்கையை வெளியிட்ட கையோடு, அனைத்து வங்கிகள், NBFC–க்கள் மற்றும் நிதி நிறுவன ங்களிடம் AI பயன்பாடு மற்றும் AI சார்ந்த பாதுகாப்பு பிரச்ச னைகளை எப்படி நிர்வாகம் செய்யப்போகிறது என்பது குறித்த தெளிவான திட்டத்தை இயக்குநர் குழு (Board) ஒப்புதல் உடன் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

இது வெறும் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் டெக் பிரிவு பணி இல்லை, அல்லாமல் நிர்வாகக் குழுவின் பொறுப்பாக ஆர்பிஐ பார்க்கிறது. இதன் மூலம் மைதோஸ் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது உணர்த்துகிறது. Claude Mythos என்பது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உச்சமாக பார்க்கப்படுகிறது. இது ஒரு சாப்ட்வேர் அல்லது பாதுகாப்பு அமைப்பை முழுமையாக ஸ்கேன் செய்து அதில் உள்ள ஓட்டைகளை ஆய்வு செய்து சைபர் அட்டாக் செய்து உள்நுழையக்கூடிய திறன் கொண்டதாக உள்ளது. இதனாலேயே அமெரிக்கா முதலில் இதை உலக நாடுகளுக்கு கொடுக்க தடை விதித்தது. ஆனால் தற்போது பல கட்டுப்பாடுகள் உடன் Claude Mythos–ஐ உலக நாட்டு மக்கள் பயன்படுத்த அமெரிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதனாலேயே தற்போது பதற்றம் அதிகரித்துள்ளது.

இதனால் ஒவ்வொரு வங்கியும் வலுவான சைபர் பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் தள்ளப்பட்டு உள்ளது. ஏஐ உதவியுடன் சோதனைகள் நடத்தி, வங்கி கட்டமைப்பில் இருக்கும் பாதிப்புகளை அடையாளம் கண்டு, நேரத்துக்கு ஏற்ற மாற்றங்களையும், மேம்பாட்டை செய்ய வேண்டும்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் (DISHA) மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்தமிழ் செல்வன், மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.கல்லாணை (மதுரை வடக்கு), எஸ்.ஆர்.தங்கப்பாண்டி (மதுரை மேற்கு), சோ.கார்த்திகேயன் (மதுரை கிழக்கு), எம்.வி.கருப்பையா (சோழவந்தான்),எம்.எம். கோபிசன் (மதுரை தெற்கு), மதார் பதூருதீன் (மதுரை மத்திய), ம.விஜய் (உசிலம்பட்டி), மாநகராட்சி மேயர்(பொ)– துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தமிழகத்தில் இடைத்தேர்தல் இப்போதைக்கு இல்லை: தேர்தல் கமிஷன் தள்ளிவைப்பு!




சென்னை, ஜூலை 03–

தமிழகத்தில் காலியாகவுள்ள ஏழு சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிப்பை, தேர்தல் கமிஷன் தள்ளி வைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பா.ஜ., தேசிய தலைவராகவும், ராஜ்யசபா எம்.பி.,யாகவும் உள்ளவர் நிதின் நபீன். இவர், பீஹார் மாநிலம் பாங்கிபூர் தொகுதி எம்.எல்.ஏ., பதவியை, மார்ச் மாதம் ராஜினாமா செய்தார்.

மத்திய பிரதேச மாநிலம், டாடியா தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ.,வாக இருந்தவர் ராஜேந்திர பாரதி. வங்கி மோசடி வழக்கில் சிறை தண்டனை விதிக்கப்பட்டதால், அவரது எம்.எல்.ஏ., பதவி பறிக்கப்பட்டது.

குஜராத் மாநிலம், மஞ்சள்பூர் பா.ஜ., –– எம்.எல்.ஏ., யோகேஷ்பாய் படேல், உடல்நலக் குறைவு காரணமாக ஜூன் 2ம் தேதி இறந்தார். இதையடுத்து, இந்த மூன்று தொகுதிகளும் காலியானதாக தேர்தல் கமிஷன் அறிவித்திருந்தது.

தமிழக முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ., பதவியை மே மாதம் ராஜினாமா செய்தார்.

அ.தி.மு.க., சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மதுராந்தகம் மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயகுமார், தாராபுரம் சத்தியபாமா, அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை விஜயபாஸ்கர் ஆகியோரும் பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர்.

இதில், கரூர், விராலிமலை தவிர, மற்ற ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் தேர்தல் கமிஷனில் நடந்து வந்தன. எப்போது வேண்டுமானாலும் இடைத் தேர்தல் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், பாங்கிபூர், டாடியா, மஞ்சள்பூர் ஆகிய மூன்று தொகுதிகளுக்கு, இம்மாதம் 30ம் தேதி இடைத்தேர்தல் நடக்கும் என தேர்தல் கமிஷன் நேற்று அறிவித்தது. ஆனால், தமிழகத்தில் காலியான சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பை, தேர்தல் கமிஷன் நேற்று வெளியிடவில்லை.

அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் ராஜினாமா தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், இடைத்தேர்தல் அறிவிப்பை தேர்தல் கமிஷன் தள்ளி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

# மாஜி அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது!



சென்னை, ஜூலை. 03–

முதல்வர் விஜய் குறித்து ஒருமையில் பேசியதாக எழுந்த சர்ச்சை தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்திருந்த முன்ஜாமின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மனு தள்ளுபடி செய்யப்பட்ட சில நிமிடங்களில் ஆத்தூரில் ஆய்வுக்கு வந்தபோது ஆத்தூர் பேரூராட்சியில் கைது செய்யப்பட்டார் அங்கிருந்த ஆய்வாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து கோஷமிட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

# இடைத்தேர்தலுக்கு தயாராகும் தி.மு.க.- கட்சி நிர்வாகிகளுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!



சென்னை, ஜூலை. 03–

2026 தமிழ்நாடு சட்டசபை தேர்தல் முடிவுகள் கடந்த மே மாதம் வெளியாகி விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனிடையே, தேர்தல் முடிவுகள் வெளியான சில நாட்களிலேயே அ.தி.மு.க.வில் இருந்து எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஜெயக்குமார் (பெருந்துறை), மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) டாக்டர் சி.விஜயபாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர். விஜயபாஸ்கர் (கரூர்) ஆகியோரும் த.வெ.க.வில் இணைந்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் பெரம்பலூர் எம்எல்ஏ பொறுப்பை ஏற்ற நிலையில் திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்ததால் அத்தொகுதி காலியனதாக அறிவிக்கப்பட்டது. மேலும் சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வென்ற மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, அம்பை, புதுக்கோட்டை, கரூர் ஆகிய தொகுதிகளும் காலியானதாக அறிவிக்கப்பட்டது. ஆக மொத்தம் இதுவரை காலியாக அறிவிக்கப்பட்டுள்ள 7 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் தேதி அறிவிக்கபட உள்ளது.

இதனால் இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து அரசியல் கட்சிகள் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தமிழ்நாட்டில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில் போட்டியிடப்போடவில்லை என தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க.வில் இணையும் தி.மு.க., - எம்.பி., மகள்!



சென்னை, ஜூலை. 03–

தி.மு.க., ராஜ்யசபா எம்.பி., சிவாவின் மகள் காயத்ரி, விரைவில் த.வெ.க.,வில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# சர்வதேச விமான டிக்கெட் கட்டணம் குறைகிறது!




புதுடில்லி, ஜூலை. 03–


அமெரிக்கா – ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கச்சா எண்ணெய் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. இதனால், சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெயின் விலையும் சரிந்தது.

எனவே, விமானக் கட்டணத்தின் முக்கிய அங்கமான எரிபொருள் கூடுதல் கட்டணத்தை குறைக்க விமான நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. இதனால், சர்வதேச விமான டிக்கெட்டுகளின் விலை குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் ஒருபகுதியாக, எரிபொருள் கூடுதல் கட்டணத்தை ஏர் இந்தியா நிறுவனம் ஜூலை 1 முதல் குறைத்துள்ளது.

ஐரோப்பா மற்றும் பிரிட்டன் வழித்தடங்களுக்கான சர்வதேச எரிபொருள் கூடுதல் கட்டணத்தை 38 சதவீதமும், ஆஸ்திரேலியா மற்றும் வட அமெரிக்க வழித்தடங்களுக்கு 28.5 சதவீதமும் ஏர் இந்தியா நிறுவனம் குறைத்துள்ளது.

அதாவது, ஏப்ரல் 10ம் தேதி முதல் ஐரோப்பா செல்லும் பயணிக்கு ரூ.19,520ஆக இருந்த எரிபொருள் கூடுதல் கட்டணம், தற்போது ரூ.11,900 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஆஸ்திரேலியா மற்றும் வட அமெரிக்கா வழித்தடங்களுக்கு முன்பு ரூ.26,664 வசூலிக்கப்பட்ட நிலையில், தற்போது ரூ.10,045 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாமல், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம், ஓமன் நாட்டின் சலாலா மற்றும் குவைத் ஆகிய இடங்களுக்கான விமானச் சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளது. இதன்மூலம், மேற்காசியாவில் வழங்கி வந்த அனைத்து இடங்களுக்கும் விமானச் சேவைகள் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக அறிவித்துள்ளது



# உங்கள் லக்னம் மற்றும் கிரகங்கள் உடல் தோற்றத்தை எவ்வாறு பாதிக்கின்றன?



நீண்ட காலமாக ஜோதிடத்தை கற்பவர்களும், அதில் அனுபவம் பெற்ற நபர்கள், பலருடைய ஜாதகங்களை ஆராய்ந்து இருப்பார்கள்.அத்தகையவர்கள் அவருடைய ஜாதகத்தை பார்த்தே அவருடைய நிறம், உயரம், தோற்றம், முக அமைப்பு என பல விஷயங்களை கணிக்க முடியும். எனவே ஜோதிடத்தை கற்க கூடிய மாணவர்கள், லக்னங்களின் தன்மைகள், குணாதிசயங்கள் குறித்து சரியாக உள்வாங்கிக் கொள்வது அவசியம். ஏனெனில் ஜாதகத்தில் உள்ள லக்னம் மற்றும் கிரகங்கள் மூலம் உடல் தோற்றத்தை எவ்வாறு சரிபார்ப்பது என்பதை கணிக்க முடியும்.

**ஜாதகக் கணிப்பு**

ஜோதிடத்தின் அடிப்படையாக லக்னம், ராசி, நட்சத்திரம், அதற்குரிய அதிபதிகள், ஜாதகத்தில் அமைந்துள்ள கிரகங்களின் அமைப்பு, கிரக சேர்க்கைகள், கிரகங்களின் பார்வை என பல்வேறு விஷயங்கள் கிரகங்கள் மற்றும் லக்னத்தின் மீது விழும் பார்வைகள் ஆகியவற்றின் மூலமே முக்கியமாகக் கணிக்கப்படுகின்றன; வேத ஜோதிடத்தில் இது தேக விசாரம் என்று அழைக்கப்படுகிறது.

அதாவது ஒருவருடைய ஜாதகத்தின் அடிப்படையில் எல்லோரும் தோற்றங்களான நிறம், உயரம், உடல் அமைப்பு மற்றும் ஆளுமையை வெளிப்படுத்துதல், அவருடைய குணாதிசயங்கள் என்ன பல்வேறு விஷயங்கள் லக்னம், லக்னாதிபதி,லக்னம் ராசியின் தன்மை அதாவது அது

நெருப்பு அல்லது காற்று, வாயு, நீர் ராசிகள் என அமையப்பெற்றிருக்கும்.

ஒருவருடைய லக்னம் நெருப்பு அல்லது காற்று ராசி சேர்ந்தவர்கள் அரிதாகவே உடல் பருமனுடன் இருப்பார்கள்.

அதேபோல நிலம் அல்லது நீர் ராசிகள் அமைந்திருந்தால் அந்த நபர் பருத்த உடல் கொண்டவர்களாகவும் அல்லது குண்டான அமைப்புடன் இருப்பார்கள்.

**உடலமைப்பின் மீது கிரகங்களின் தாக்கம்**

லக்னத்தில் குரு, சந்திரன் மற்றும் சூத்திரம் போன்ற நீர் கிரகங்கள் அமைந்து இருப்பின் அல்லது அவற்றின் பார்வை அல்லது செயற்கைக்கும் இடையே ஏதேனும் தொடர்பு இருப்பின் அது உடல் பருமனுக்கு காரணமாக அமையலாம்.

மேலும் ஒருவருடைய ஜாதகத்தில் ராகு லக்னத்தையும் அல்லது சந்திரனையோ பார்த்தால், அதன் காரணமாக அந்த நம்பரை உடல் மெலிந்த, வறண்ட சருமம், கவர்ச்சியற்ற தேகத்தை கொண்டிருப்பார்.

ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் பகவான், லக்னத்தில் அல்லது சந்திரன் பாதித்தல் அந்த நபரின் உடல் கட்டுக்கோப்பானதாகவும், வலிமையாகவும் இருக்கும்.

ஜாதகத்தில் சுக்கிரன் சிறப்பாக இருப்பின் அவர் சுருள் மூடி, பொலிவான தேகம், அழகான கண்கள் மற்றும் கவர்ச்சியான தோற்றத்துடன் இருப்பார்.

**ஜாதக கிரகங்கள் மற்றும் தாக்கம்**

லக்னத்தில் சூரியன் இருந்தால் அவருடைய உடல் வலுவாக இருக்கும். ஆனால் தலையில் முடி குறைவாகவே இருக்கும்.

ஜாதகத்தில் சந்திரனின் தாக்கம் இருப்பின் அவர் உடலானது மென்மையாகவும், அழகிய முகமும், பெரிய கண்களும் இருக்கும்.

ஜாதகத்தில் புதனின் தாக்கம் உச்சத்தில் இருப்பின் அவர் நடுத்தர உயரம், பொலிவான சருமம் மென்மையான உடலை கொண்டிருப்பார்.

ஒருவரின் உடல் தேகம் கருமையாக மற்றும் அதிக முடி இருப்பின் அவருடைய லக்னத்திலும் அல்லது ராசியில் சனியின் தாக்கம் இருக்கும்.

ஒருவருடைய லக்னத்தின்படி உடல் தோற்றத்தின் அமைப்பு எப்படி இருக்கும் அவருடைய வெளித்தோற்றம் லக்னத்தையும், மனநிலையானது சந்திரன் அமையப்பெற்ற ராசியையும் சார்ந்ததாக இருக்கும். இனி 12 லக்கினங்கள் கூறிய குணநலன் மற்றும் உடலமைப்பை பார்ப்போம்.

**மேஷம், ரிஷப, மிதுன லக்னம்**

**மேஷ லக்னம்**

மேஷ லக்னத்தை சேர்ந்தவர்கள் ஆரோக்கியமான உடல், தன்னம்பிக்கை நிறைந்தவராகவும், கூர்மையான புத்தி, கண்களில் பிரகாசம் ஜொலிக்க கூடியதாக இருக்கும்.

**ரிஷப லக்னம்**

ரிஷப லக்னத்தை சேர்ந்தவர்கள் மிகவும் அழகாகவும், கவர்ச்சியான உடல் அமைப்பு மற்றும் அவர்கள் வெண்மையான அல்லது கோதுமை நிற சிரமம் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு இனிமையான குரலும் அழகான கண்களும் இருக்கும்.

**மிதுன லக்னம்**

மிதுன லக்னத்தை சேர்ந்தவர்கள் புத்திசாலித்தனமானவர்க ளாகவும், அவர்கள் செயல்பாடுகளில் சுறுசுறுப்பு மற்றும் ஆளுமை இருக்கும். இவர்களின் முகத்தைப் பார்த்தாலே அறிவாளிகள் என சொல்ல கூடிய தாக்கம் இருக்கும். எப்பொழுதும் ஆற்றுளுடன் இருப்பார்கள்.

**கடகம், சிம்மம், கன்னி லக்னம்**

**கடக லக்னம்**

கடக லக்னம் சேர்ந்தவர்கள் உடல் வெண்மை நிறத்திலும், மென்மையான நபர்களாகவும், நிலவைப் போன்ற பிரகாசமான முகம் கொண்டவர்களாகவும் பொலிவான தேகமும் இருக்கும்.

**சிம்ம லக்னம்**

இவர்கள் மீது மற்றும் செயல்பாடுகளில் ஆளுமை திறனுடன் இருப்பார்கள். கம்பீரமான தோரணை, பிரகாசமான பெரிய கண்கள் இருக்கும்.

**கன்னி லக்னம்**

கன்னி லக்னத்தை சேர்ந்த நண்பர்கள் மெலிந்த தேகத்துடன், சீரான உடல், கூர்மையான பார்வை கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்களிடம் நல்ல ஆளுமை திறன் இருக்கும். இவர்களின் இளமை நீண்ட காலம் நீடிக்கும்.

**துலாம், விருச்சிகம், தனுசு லக்னம்**

**துலாம் லக்னம்**

துலாம் லக்னத்தை சேர்ந்த அன்பர்கள் அழகான உடல் அமைப்பு மற்றும் காந்தத்தைப் போல ஈர்க்க கூடிய ஆளுமை, கார்த்திகை மாதம் பேச்சு மற்றும் பார்வை இருக்கும்.

**விருச்சிக லக்னம்**

விருச்சிக லக்னத்தில் சேர்ந்தவர்களின் வலிமையான மற்றும் தசை பிடிப்புள்ள பிடிப்புள்ள உடல் கொண்டிருப்பார்கள். அவர்கள் முகத்தில் தீவிர தன்மையும். ஆழமாக யோசிக்க கூடிய அல்லது மர்மமான சிந்தனை கொண்ட கண்கள் இருக்கும்.

**தனுசு லக்னம்**

தனுசு லக்னத்தை சேர்ந்தவர்கள் உயரமான உடலை, வலிமையான தொடைகள், இருக்கக்கூடிய தோற்றம், தெளிவான முகம் இருக்கும்.

**மகரம், கும்ப, மீன, லக்னம்**

**மகர லக்னம்**

மகர லக்னம் சேர்ந்தவர்கள் வயதாகும்போது ஆளுமை திறன் அதிகரிக்கும். இவர்கள் மெலிந்த உடலையும், தீவிரமான முகம், கருமையான நிறம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

**கும்ப லக்னம்**

கவர்ச்சியான கண்கள், உயரமானவர்களாகவும், சமச்சீரான உடல், தனித்துவமான தோற்றம், சிந்தனையில் ஆளுமை, அசாதாரணமான திறமை கொண்டவர்களாக இருப்பார்கள்.

**மீன லக்னம்**

மீன லக்ன அன்பர்கள் மென்மையான உடல்,உணர்ச்சிமிக்க நபர்களாகவும், சாந்தமான ஆளுமை திறன், முகத்தில் கருணையும், அமைதியின் வெளிப்பாடும் இருக்கும்.

# சென்னை மாநகராட்சியில் சொத்துவரி வசூல் முகாம் தொடக்கம்!




சென்னை, ஜூலை. 03–

சென்னை மாநகராட்சிக்கு சொத்து வரி, தொழில் வரி ஆகியவை பிரதான வருவாயாக உள்ளது. சுமார் 13.5 லட்சம் சொத்து உரிமையாளர்கள் மூலம் மாநகராட்சிக்கு சொத்து வரி மூலம் வருவாய் கிடைக்கிறது.

இதனிடையே, சொத்துவரி செலுத்துபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டபோதும் ஆயிரக்கணக்கானோர் சொத்து வரியை இதுவரை செலுத்தாமல் உள்ளனர். இதையடுத்து நிலுவையில் உள்ள சொத்து வரியை வசூலிக்க சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நிலையில், சென்னை மாநகராட்சியில் சொத்துவரி வசூல் முகாம் தொடங்கியுள்ளது. அதன்படி, சென்னையில் அனைத்து மண்டல அலுவலகங்கள், வார்டு அலுவலகங்களில் சொத்து வரி வசூலிப்பு முகாம் இன்று முதல் வரும் 17ம் தேதி வரை நடைபெறுகிறது. காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை முகாம்களில் சொத்து உரிமையாளர்கள் வரி செலுத்தலாம் என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.




## பெண் குழந்தையின் பெற்றோர்களா நீங்கள்..! அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியவை!



பெண் குழந்தையின் வாழ்க்கையில் முக்கியமான மாற்றக்கட்டமாக அமைவது முதல் மாதவிடாய். இது ஒரு இயல்பான உடல் வளர்ச்சி நிகழ்வு மட்டுமல்ல; உடல், மனம், உணர்ச்சி ஆகிய அனைத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும் காலமாகும். இந்த கட்டத்தில் குழந்தைகள் குழப்பம் அல்லது பயம் உணர வாய்ப்பு உள்ளது. அதனால், பெற்றோர் முன்கூட்டியே தயார் செய்து, சரியான வழிகாட்டுதலை வழங்குவது மிகவும் முக்கியம்.

மாதவிடாய் திடீரென வருவதில்லை, பொதுவாக 1015 வயதுக்குள் தொடங்கும். சராசரி வயது சுமார் 12 ஆகும். அதற்கு முன் சில அறிகுறிகள் படிப்படியாக தோன்றும். முதலில் மார்பக வளர்ச்சி, இது பொதுவாக முதல் அறிகுறியாகும்.குழந்தைகள் திடீரென உயரமாகவும், பருமனாகவும் மாறுதல், அக்குள் மற்றும் பிற பகுதிகளில் முடி வளர்ச்சி ஏற்படுதல், இடுப்பு அகலமடைதல் மற்றும் வெள்ளைப்படுதல் (white discharge) போன்றவை மாதவிடாய் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பு தொடங்கலாம். வயிற்றுவலி ,மனநிலை மாற்றங்கள், கவலை, சோக உணர்வு போன்றவை ஹார்மோன் மாற்றத்தால் ஏற்படலாம். உடலில் ஏற்படும் மாற்றங்களை பற்றி வெட்கம் அல்லது குழப்பம் கொள்ளலாம். பெற்றோர் இதை சாதாரணமாக எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் . இந்த கட்டத்தில் உடலுக்கு கூடுதல் சத்துக்கள் தேவைப்படும்,

**கீரை வகைகள்**

(முருங்கைக்கீரை, பசலைக்கீரை),பேரிச்சம்பழம், உலர் திராட்சை,பயறு வகைகள், கால்சியம் (பால், தயிர்),புரதச்சத்து,அதிக தண்ணீர் போன்ற சமநிலைக்குசீரான உணவு முறையும், நேரமான உணவுமுறையும் அவசியம். இந்த நேரத்தில் சுகாதாரம் மிகவும் அவசியம்.சானிட்டரி பேடுகளை 46 மணி நேரத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும். தனிப்பட்ட பகுதிகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுத்தமான மற்றும் காற்றோட்டமான உள்ளாடைகள் பயன்படுத்த வேண்டும். அவற்றை சரியான முறையில் அகற்ற வேண்டும்.

பெற்றோர் இந்த காலத்தில் செய்ய வேண்டியது குழந்தையுடன் அன்பாகவும்,நெருக்கமாகவும் திறந்த மனதுடனும் பேச வேண்டும். மாதவிடாய் பற்றி வெட்கப்பட வேண்டியதில்லை என்பதை உணர்த்த வேண்டும். முதன்முறையாக வரும் போது என்ன செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே சொல்லிக்கொடுங்கள்.முதல் மாதவிடாய் என்பது ஒரு புதிய ஆரம்பம். சரியான அறிவும், உணர்ச்சி ஆதரவும், சுகாதார பழக்கங்களும் இருந்தால், இந்த மாற்றத்தை குழந்தைகள் நம்பிக்கையுடனும் ஆரோக்கியமாகவும் எதிர்கொள்ள முடியும்.பெற்றோர் தரும் ஆதரவே குழந்தையின் தைரியத்தின் அடித்தளம்.

# பிஎப் விதிகளில் 4 புதிய மாற்றங்கள்...!



புதுடெல்லி, ஜூலை. 03–

மத்திய அரசு, 1952–ஆம் ஆண்டு இபிஎப் திட்டத்திற்கு பதிலாக புதிய ஊழியர் வருங்கால வைப்பு நிதித் திட்டம்2026–ஐ ஜூன் 29 முதல் அமல்படுத்தியுள்ளது. இது 8 கோடிக்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு பொருந்தும்.

**கட்டாய பங்களிப்பு:** மாத ஊதிய உச்சவரம்பான ரூ.15,000–இன் 12% என ரூ.1,800 மட்டுமே கட்டாய பிஎப் பங்களிப்பாக இருக்கும். இதே அளவு தொகையை நிறுவனமும் செலுத்தும்.

**கூடுதல் பங்களிப்பு:** ரூ.1,800–க்கு மேல் ஊழியர்கள் செலுத்தும் தொகை சுயவிருப்ப (Voluntary PF) பங்களிப்பாக கருதப்படும். அந்த கூடுதல் தொகைக்கு நிறுவனங்கள் இணை பங்களிப்பு வழங்க வேண்டிய கட்டாயம் இல்லை.

**பிஎப் பணம் பெறுதல் எளிது:** பகுதி தொகையைப் பெறும் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. மருத்துவம், கல்வி, திருமணம், வீடு வாங்குதல் அல்லது கட்டுதல் மற்றும் பிற சிறப்புச் சூழ்நிலைகளுக்காக எளிதில் விண்ணப்பிக்கலாம்.

**முழு டிஜிட்டல் சேவை:** ஆவணங்களை மின்னணு முறையில் சமர்ப்பித்தல், ஆன்லைன் கிளைம், இ–பாஸ்புக் மற்றும் UAN ஒருங்கிணைப்பு உள்ளிட்ட சேவைகள் முழுமையாக டிஜிட்டல் முறையில் வழங்கப்படும்.

**முக்கியம்:** புதிய திட்டத்தால் பிஎப் பங்களிப்பு விகிதமோ, ஓய்வூதிய பலன்களோ குறைக்கப்படவில்லை. கட்டாய மற்றும் சுயவிருப்ப பங்களிப்பில் தெளிவை ஏற்படுத்தி, பிஎப் சேவைகளை மேலும் எளிமையாகவும் விரைவாகவும் மாற்றுவதே இந்த விதிமுறைகளின் நோக்கமாகும்.

# ரியல் எஸ்டேட்களுக்கு புதிய கட்டுப்பாடு...!



புதுடெல்லி, ஜூலை. 03–

ரியல் எஸ்டேட் துறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, வீடு மற்றும் மனை வாங்கும் பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கில், தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA) புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. அச்சு, மின்னணு மற்றும் சமூக வலைதள விளம்பரங்களில் TNRERA விதிகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். விதிமீறினால் அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

புதிய விதிகளின்படி, TNRERA–வில் பதிவு செய்யப்படாத திட்டங்களை விளம்பரப்படுத்துவது, பதிவு செய்யப்பட்ட திட்டங்களில் TNRERA பதிவு எண் மற்றும் Form–C QR Code–ஐ குறிப்பிடாமல் இருப்பது, தெளிவில்லாத QR Code பயன்படுத்துவது, தவறான QR Code அல்லது பிற திட்டத்தின் QR Code–ஐ பயன்படுத்துவது, சந்தை விலை அல்லது பிற திட்டங்களின் விலையுடன் ஒப்பிட்டு விளம்பரம் செய்வது ஆகியவை கடுமையான விதிமீறல்களாக கருதப்படும்.

அதேபோல், பதிவு எண்ணை மட்டும் குறிப்பிட்டு QR Code வழங்காதது, QR Code மட்டும் கொடுத்து பதிவு எண்ணை விடுபடுத்துவது, TNRERA அதிகாரப்பூர்வ இணையதள முகவரி மற்றும் நிறுவன அலுவலக முகவரியை விளம்பரத்தில் குறிப்பிடாதது, RERA விலக்கு பெற்ற திட்டங்களுக்கு "RERA Exempted Project" என்ற குறிப்பைச் சேர்க்காதது ஆகியவை சாதாரண விதிமீறல்களாக வகைப்படுத்தப்பட்டு ள்ளன.

**அபராதம்:**

கடுமையான விதிமீறல்களில், திட்ட மதிப்பு ரூ.100 கோடி அல்லது அதற்கு மேல் இருந்தால் ரூ.5 லட்சம், அதற்கு குறைவான திட்டங்களுக்கு ரூ.2 லட்சம் அபராதம் விதிக்கப்படும். சாதாரண விதிமீறல்களில், ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட திட்டங்களுக்கு ரூ.1 லட்சம், ரூ.100 கோடிக்கு குறைவான திட்டங்களுக்கு ரூ.50,000 அபராதம் விதிக்கப்படும்.

மேலும், சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத பிற விதிமீறல்களுக்கும் ஆணையம் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க முடியும். தேவையெனில் ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம், 2016–ன் கீழ் கூடுதல் மற்றும் கடுமையான அபராதங்களையும் விதிக்க TNRERA–க்கு அதிகாரம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது..

# வேலை வாய்ப்பு

## ஐபிபிஎஸ் வங்கி: பட்டதாரிகளுக்கு பொன்னான வாய்ப்பு!




நிறுவனத்தின் பெயர்: IBPS வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (Institute of Banking Personnel Selection)
அறிவிப்பு எண்: CRP SPL–XVI
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 745 சிறப்பு அதிகாரி (Specialist Officer) நிலை பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும் எங்கு வேண்டுமானாலும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 01.07.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 21.07.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையதளம் வழியாக (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.ibps.in/



மதுரை மாவட்டம் அரசினர் விருந்தினர் மாளிகையில் உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா புத்தகம் கொடுத்து சந்தித்தார்.

# அதிமுக மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

சென்னை, ஜூலை. 03–

அதிமுக மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்று வருகிறது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் அதிமுகவின் வளர்ச்சி, அடுத்தகட்ட செயல்பாடு, கள நிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்று வருகிறது.

# முதல்-அமைச்சர் விஜய்யின் பெரம்பூர் தொகுதியில் பொதுமக்கள் புகார் அளிக்க பிரத்யேக செயலி!




சென்னை, ஜூலை. 03–

முதலமைச்சர் விஜய்யின் பெரம்பூர் தொகுதி மக்கள் தங்களின் தேவைகள், குறைகள், மற்றும் கோரிக்கைகளை எளிதாகத் தெரிவிக்கும் வகையில் பிரத்தியேகமாக மொபைல் செயலி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயலியின் மூலம் பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குடிநீர், சாலை, மின்சாரம் மற்றும் துப்புரவு போன்ற பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த புகார்களை நேரடியாக முதல்–அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.

அளிக்கப்பட்ட புகாரின் நிலையை நேரடியாக அறிந்துகொள்ள உதவும் வகையிலான வசதிகளுடன் மொபைல் செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மொபைல் செயலி பெரம்பூர் தொகுதி மக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மொபைல் செயலியின் சிறப்பம்சங்கள்:–**

* முதல்–அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் இச்செயலியின் வாயிலாகப் பொதுமக்கள் பதிவு செய்யும் புகார்கள் அனைத்தும், நேரடியாக முதல்–அமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்பப்படும்.
* இந்தச் செயலி மூலம் பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது, குறைந்தபட்சம் 3 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவிக்கும் குடிநீர், மின்சாரம், சாலை மற்றும் துப்புரவு போன்ற பிரச்சினைகளுக்கு அதிகபட்சமாக 10 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டு, அவற்றின் தற்போதைய நிலை குறித்து மக்களுக்கு விரிவான பதில் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
* பெரம்பூர் தொகுதியில் புதிதாக திறக்கப்படவுள்ள நவீன சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், இந்த செயலிக்கான பிரத்யேக கண்காணிப்பு அமைப்பு செயல்படும்.
* தினமும் எத்தனை புகார்கள் வருகின்றன, அவை எந்தெந்த துறைகள் சார்ந்தவை என்பதைத் துல்லியமாகத் தனித்தனியாகப் பிரித்து கண்காணிக்கும் வகையில் ஒரு நவீன 'டேஷ்போர்ட்' அமைப்பும் இதில் உருவாக்கப்பட்டுள்ளது.

**அறிமுகம் செய்கிறார் விஜய்**

தலைமைச் செயலகத்தில் மட்டுமே முதல்–அமைச்சர் அலுவலகம் இயங்கி வந்தாலும், பெரம்பூர் தொகுதி மக்களுக்காக ஒரு பிரம்மாண்ட சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் (MLA Office) தயார் செய்யப்பட்டுள்ளது. இது முதல்–அமைச்சரின் சொந்த தொகுதி என்பதால், பொதுமக்கள் வசதியாகவும், நேரடியாகப் புகார்களை மனுக்களாக அளிப்பதற்கும் ஏதுவாகப் பல நவீன மாற்றங்களுடன் இந்த அலுவலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மொபை செயலி மற்றும் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகிய இரண்டையும் அடுத்த வாரத்தில் முதல்–அமைச்சர் விஜய் முறைப்படி திறந்து வைக்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நவீன செயலி, பெரம்பூர் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# ரூ.1 லட்சம் லஞ்சம் வாங்கிய இந்து சமய அறநிலையத்துறை அதிகாரி அதிரடி கைது!

தஞ்சாவூர், ஜூலை. 03–

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டைக்கு அருகிலுள்ள தீபம்பாள்புரம் கிராமத்தில் அமைந்துள்ள வன்மீகநாதர் கோயில் திருப்பணிக்கு ₹1 லட்சம் லஞ்சம் பெற்ற இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மற்றும் உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒப்பந்ததாரர் மதியழகன் கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# பழனியில் கூனக் காளியம்மன் கோவில் திருவிழா!



பழனி, ஜூலை 03–

பழனி டவுன் காந்தி மார்க்கெட் பின்புறம், கச்சேரி தெருவில் உள்ள கூனக்காளியம்மன் கோவிலில் திருவிழா நடைபெற்றது. இதில் அம்மனுக்கு சக்தி கரகம் எடுத்து வருதல் தீர்த்தம் எடுத்து வருதல் மாவிளக்கு, முளைப்பாரி ஊர்வலம் வருதல், மஞ்சள் நீராடுதல் சிறப்பு அன்னதானம், விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் அம்மனுக்கு முளைப்பாரி எடுத்து வரும் ஊர்வலம் நடைபெற்ற போது. இதில் சிறப்பு அழைப்பாளராக சித்தநாதன் சன்ஸ் எஸ் ஜி பழனிவேல் பங்கேற்று தொடங்கி வைத்தார். இதில் பி எஸ் கே எல் குழுமம் அதிபர் ருக்கு மாங்காத ராஜ், கார்த்திகேயன் உள்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.



மதுரை மாநகராட்சி செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக திரு.நா.விஜயகுமார் பொறுப்பேற்றுக்கொண்டார்.




பழனிக்கு காவல் உட்கோட்ட கண்காணிப்பாளராக செல்வகுமார் பொறுப்பேற்று கொண்டார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சோலைமலை மண்டபம் அருள்மிகு முருகன் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு வைபவம் தொடர்பான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் டி.ஜி.வினய் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்றது.



ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியத்திற்குட்பட்ட ஏர்வாடி கிராம நிர்வாக அலுவலகம் பல ஆண்டுகளாக பழுதடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அங்கும் கழிப்பறை, குடிநீர், இருக்கை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாததால், பட்டா, சிட்டா மற்றும் பல்வேறு சான்றிதழ்களுக்காக வரும் பொதுமக்கள், குறிப்பாக பெண்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். ஏர்வாடி மற்றும் சுற்றுவட்டார 18–க்கும் மேற்பட்ட கிராம மக்களின் நீண்டகால கோரிக்கையான புதிய நிரந்தர கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடத்தை அமைக்க மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பழுதடைந்த கட்டிடத்தை அகற்றி அனைத்து அடிப்படை வசதிகளுடனும் புதிய அலுவலகம் கட்ட வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



# இன்றைய கார்ட்டூன்




## அரசுப்பணிகளை ஆய்வு செய்ய கவர்னருக்கு உரிமை இல்லை - அமைச்சர் நிர்மல்குமார்!

சென்னை, ஜூலை. 03–



தமிழக பொறுப்பு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் நேற்று மதுரை சென்றார். அங்கு தனியார் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் கவர்னர் பங்கேற்றார். அப்போது மதுரையில் வைகை ஆறு உள்ளது. ஆனால் அதில் நீர் இல்லை. அதை சீரமைக்க வேண்டும். மேலும் வைகை ஆற்றை மீட்க இளைஞர்கள் முன்வர வேண்டும். அதற்கான முயற்சி யாரும் எடுக்கா விட்டால் கவர்னர் மாளிகை முயற்சி எடுக்கும் என்று பேசினார்.

இந்த விவகாரம் குறித்து சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் கூறியதாவது:–


தமிழகம் முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அதிகாரத்துக்குட்பட்டு ஆய்வு செய்யலாம். எந்தவித அதிகாரமும் இல்லாமல் கவர்னர் இங்கு வந்து எந்தவொரு திட்டத்தையும் ஆய்வு செய்ய உரிமை இல்லை. அதை இந்த அரசு என்றைக்கும் அனுமதிக்காது.

எங்கையாவது தேவையில்லாமல் அரசின் நிர்வாகத்தில் கவர்னர் வந்து ஆய்வு செய்வேன் என்று தலையிட்டால் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்படும். கண்டிப்பாக எந்த அதிகாரியும் அரசின் அனுமதி இல்லாமல் கவர்னருக்கு ஒத்துழைப்பு கொடுக்கக்கூடாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட அரசு இருக்கும்போது கவர்னர் தேவையில்லாமல் ஆய்வு செய்வது தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்தும். அவருக்கு அந்த அதிகாரம் கிடையாது. அரசின் நடவடிக்கைகளில் கவர்னர் தலையிட கூடாது. அரசு திட்டங்களை ஆய்வு செய்ய கவர்னரை அனுமதிக்க முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

## அமர்நாத் பனிலிங்க தரிசன யாத்திரை தொடங்கியது!

ஜம்மு–காஷ்மீர், ஜூலை. 03–



ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இமயமலையில் இந்து மதக்கடவுள் சிவபெருமானின் அமர்நாத் குகைக்கோவில் அமைந்து உள்ளது.

ஸ்ரீநகரில் இருந்து 141 கிலோ மீட்டர் தொலைவில் அனந்தாக் மாவட்டத்தின் பஹல்காமில் இந்த கோவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 3 ஆயிரத்து 888 மீட்டர் உயரத்தில் அமர்நாத் குகைக்கோவில் அமைந்துள்ளது.

இந்த குகைக்கோவிலில் இயற்கையாக தோன்றும் பனிலிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை இன்று தொடங்கி உள்ளது. இன்று முதல் அடுத்த மாதம் 28–ந் தேதி வரை 57 நாட்கள் யாத்திரை நடைபெற உள்ளது. அமர்நாத் யாத்திரை இன்று தொடங்கியுள்ள நிலையில் பால்தல், பஹல்காம் முகாம்களில் இருந்து முதல் குழுவாக 10 ஆயிரம் பேர் அமர்நாத் குகைக்கோவில் செல்லும் பயணத்தை தொடங்கினர்.

இயற்கையாக உருவான பனிலிங்கம் அமைந்துள்ள அந்தக் குகைக் கோவிலில் அவர்கள் வழிபாடு செய்வார்கள். யாத்திரை சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, இருவழித் தடங்களிலும் போலீசார், மத்திய ரிசர்வ் காவல் படை மற்றும் பிற துணை ராணுவப் படைகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வான்வழி கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


யாத்திரையையொட்டி, ஜம்மு–ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் பக்தர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. ஆகஸ்டு 28–ந்தேதி வரை இந்தக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் என்று போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடைகளை சாலைகளில் விடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை!

மதுரை, ஜூலை. 03–

சாலையில் திரியும் ஆடு மாடுகளால் விபத்து அதிகரிப்பதாகக் கூறி ஐகோர்ட் மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டது. ராமநாதபுரம் மாவட்டத்தில் சாலைகளில் அதிக அளவில் மாடுகள் திரிவதால் வாகன ஓட்டிகள் பாதிப்பு என மனுதாரர் தெரிவித்தார். கால்நடைகளை சாலைகளில் விடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ் அரசு தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

## ஷாக் கொடுத்த தங்கம் விலை..!



சென்னை, ஜூலை. 03–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,200 உயர்ந்து ரூ.1,09,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.150 உயர்ந்து ரூ.13,700–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை போல வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## சினிமா துளிகள்..!

## பாலிவுட் + கோலிவுட் + டோலிவுட் : சினிமா செய்திகள்!

**பிரான்சில் ராஜமௌலிக்கு உயரிய சர்வதேச கவுரவம்**

இந்திய சினிமாவுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இயக்குநர் எஸ்.எஸ். ராஜமௌலி பிரான்சின் லியோனில் 'Julliat 2026' சர்வதேச கவுரவத்தை பெற்றார். அவரது 'ஈகா', 'ஆர்ஆர்ஆர்' படங்கள் சிறப்புத் திரையிடப்பட்டதுடன், உலகப் புகழ்பெற்ற இயக்குநர்களின் Mur des Cinastes நினைவுச் சுவரிலும் அவரது பெயர் பொறிக்கப்பட்டது.

**'ராவ் பகதூர்' டிரெய்லருக்கு அமோக வரவேற்பு**

சத்யதேவ் நடித்துள்ள 'ராவ் பகதூர்' படத்தின் டிரெய்லர் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. நாக சைதன்யா உள்ளிட்ட பலர் டிரெய்லரை பாராட்டியுள்ளனர். படம் இன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

**தென்னிந்திய சினிமா வசூலில் சாதனை**

2026–ன் முதல் அரையாண்டில் தென்னிந்திய திரைப்படங்கள் வசூலில் புதிய சாதனை படைத்துள்ளன. ராம் சரண்நடித்த 'பெட்டி (Peddi)' முன்னணியில் உள்ளது. 'திரிஷ்யம் 3', 'கருப்பு' உள்ளிட்ட படங்களும் வெற்றிகரமாக ஓடியுள்ளன.

**'Balan: The Boy' படத்திற்கு மணிரத்னம் பாராட்டு**

இயக்குநர் மணிரத்னம், 'Balan: The Boy' திரைப்படத்தின் திரைக்கதை, இயக்கம் மற்றும் தொழில்நுட்பத் தரத்தை பாராட்டியுள்ளார். இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

**பாலிவுட்டில் யதார்த்த கதைகளுக்கு முக்கியத்துவம்**

நடிகை மாதுரி தீட்சித், "இப்போது இயல்பான மனிதர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கதைகளே ரசிகர்களை அதிகம் கவர்கின்றன" என்று தெரிவித்துள்ளார்.

**ஜூலை மாதம் திரையுலகில் பரபரப்பு**

இந்த மாதம் பல பான்–இந்தியா படங்கள், நட்சத்திரங்களின் புதிய வெளியீடுகள் மற்றும் ஒடிடி படங்கள் வெளியாக உள்ளதால் திரையுலகம் பரபரப்பாக உள்ளது.

**இன்று ஒடிடி & திரையரங்குகளில்**

Enola Holmes 3, Hangman, Mollywood Times, Karakkam, Super Subbu உள்ளிட்ட ஒடிடி வெளியீடுகளுடன், தமிழில் 'கட்டா குஸ்தி 2', 'தி டார்க்' உள்ளிட்ட படங்கள் இன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளன.

## திண்ணையில் படுத்திருந்த நடிகர் பாவா லட்சுமணனுக்கு அமைச்சர் ராஜ்மோகன் உதவி!



உடல்நலக் குறைவு மற்றும் பொருளாதார நெருக்கடியால் சிகிச்சை பெற்று வரும் நடிகர் பாவா லட்சுமணன், திண்ணையில் படுத்திருந்ததாக வெளியான தகவல் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் பரவியதைத் தொடர்ந்து பரபரப்பு ஏற்பட்டது. இந்த தகவல் அறிந்த அமைச்சர் ராஜ்மோகன், உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்று நடிகரை நேரில் சந்தித்து அவரது உடல்நிலையை விசாரித்தார்.

மேலும், தேவையான மருத்துவ சிகிச்சை மற்றும் அரசு சார்பிலான உதவிகள் உடனடியாக கிடைக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது. நடிகரின் குடும்பத்தினரிடமும் அவர் ஆறுதல் கூறி, தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

அமைச்சரின் துரித நடவடிக்கைக்கு பொதுமக்கள் மற்றும் திரையுலகினர் பாராட்டு தெரிவித்துள்ளனர். நீண்ட காலமாக தமிழ் திரைப்படங்களில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்த பாவா லட்சுமணனின் உடல்நலம் விரைவில் குணமடைய வேண்டும் என்று ரசிகர்களும் திரையுலக பிரபலங்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.


## "மால் கம்பேக் ரெடி... 'ஜெயிலர் 2' அறிவிப்பு!"




2023 ல் வெளியான ஜெயிலர் திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து உருவாகும் இரண்டாம் பாகத்தில், ரஜினிகாந்த் மீண்டும் முதல் பாகத்தில் இடம்பெற்ற அதே தோற்றத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில், ஜெயிலர் 2 திரைப்படத்தின் வெளியீட்டுத் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இயக்குநர் நெல்சன் இயக்கும் இந்தப் படம், வரும் அக்டோபர் 15–ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளதாக தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இப்படத்தின் வெளியீட்டு தேதியை அறிவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட சிறப்பு காணொளியில் முக்கிய நடிகர்கள் இடம்பெற்றிருப்பது ரசிகர்களிடையே கூடுதல் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜெயிலர் 2 குறித்த அடுத்தடுத்த அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டெல்லியின் புதிய மின் வாகனக் கொள்கை!




புதுடெல்லி, ஜூலை. 03–

காற்று மாசுபாட்டால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள டெல்லியில், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் பாஜக அரசு 'மின் வாகனக் கொள்கை2.0'–ஐ அமல்படுத்தியுள்ளது. இந்தக் கொள்கை 2026 ஜூலை 1 முதல் 2030 மார்ச் 31 வரைஅமலில் இருக்கும். 2030–க்குள் டெல்லியில் இயங்கும் வாகனங்களில் 30% மின் வாகனங்களாக மாற்றுவது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போதுமின்வாகனங்களின் பங்கு சுமார் 14% ஆக உள்ளது.

டெல்லியில் காற்று மாசுக்கு வாகனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் பயிர் கழிவுகள் எரிக்கப்படுவது முக்கிய காரணங்களாக உள்ளன. இதைக் கட்டுப்படுத்தும் வகையில், 2027 ஜனவரி 1 முதல் பேட்டரி ஆட்டோக்கள் மற்றும் 3,500 கிலோவுக்கு உட்பட்ட மின் சரக்கு வாகனங்கள் மட்டுமே புதிதாக பதிவு செய்யப்படும். 2028 ஏப்ரல் 1 முதல் மின் இருசக்கர வாகனங்கள் மட்டுமே பதிவு செய்ய அனுமதிக்கப்படும். மேலும், இரண்டு ஆண்டுகளுக்குள் பள்ளிப் பேருந்துகளில் குறைந்தது 10% மின் பேருந்துகளாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக ரூ.15,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் உள்கட்டமைப்பு, வரிச்சலுகை, பழைய வாகனங்களை ஸ்கிராப்பில் ஒப்படைப்போருக்கான ஊக்கத்தொகை, மானியங்கள் மற்றும் 32 ஆயிரம் சார்ஜிங் நிலையங்கள் அமைப்பது ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ரூ.30 லட்சம் வரை மதிப்புள்ள மின் வாகனங்களுக்கு சாலைவரி மற்றும் பதிவுக் கட்டணம் விலக்கு அளிக்கப்படுகிறது. இருசக்கர வாகனங்களுக்கு ரூ.30,000, மூன்றுசக்கர வாகனங்களுக்கு ரூ.50,000, என்–1 சரக்கு வாகனங்களுக்கு ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படும். பழைய பெட்ரோல், டீசல் வாகனங்களை ஸ்கிராப்பில் ஒப்படைப்போருக்கும் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இந்தக் கொள்கையால் காற்று மாசுபாடு குறைவதுடன், மின் வாகன உற்பத்தி, சார்ஜிங் உள்கட்டமைப்பு மற்றும் சுத்தமான போக்குவரத்து வளர்ச்சி பெறும் என அரசு எதிர்பார்க்கிறது.

அதே நேரத்தில், மின் வாகனங்களின் அதிக விலை, எளிய கடன் வசதி, போதிய சார்ஜிங் நிலையங்கள், மின் தேவையை பூர்த்தி செய்தல், பேட்டரி மறுசுழற்சி மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களை உருவாக்குதல் போன்றவை முக்கிய சவால்களாக உள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்ட இந்த முயற்சி வெற்றியடைந்தால், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சி.வி.சண்முகத்திற்கு ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு!

சென்னை, ஜூலை. 03–




அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகத்துக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு டிஜிபிக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுகவை சேர்ந்த முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.எல்.ஏ–வுமான சி.வி.சண்முகம் தாக்கல் செய்திருந்த மனுவில்,"கடந்த 2006–ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது என்னை கொலை செய்ய எதிர்க்கட்சியினர் முயற்சித்தனர். அப்போது எனது சகோதரரும், மைத்துனரும் கொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்துக்குப் பின், எனக்கும், எனது வீட்டுக்கும் போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்தநிலையில் 2021ம் ஆண்டு பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றம், அச்சுறுத்தல் உள்ளதால் பாதுகாப்பு வழங்குவது குறித்து மறுபரிசீலனை செய்ய உத்தரவிட்டிருந்தது.

தற்போது தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருவதால் இதுசம்பந்தமாக சென்னை, விழுப்புரம் மாவட்ட காவல் நிலையங்களில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


இதுசம்பந்தமான வழக்குகளையும், புகார்களையும் சிபிஐக்கு மாற்ற உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி. கே.இளந்திரையன் பிறப்பித்துள்ள உத்தரவில், தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருவது குறித்து வெவ்வேறு விதமான குற்றச்சாட்டுகளுடன் சி.வி.சண்முகம் புகார் அளித்துள்ளதால் அதனை சிபிஐக்கு மாற்ற வாய்ப்பில்லை.

தொடர்ச்சியாக கொலை மிரட்டல் வருவதால் தனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையை சி.வி.சண்முகம் நிரூபித்துள்ளார். எனவே அவருக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பை டிஜிபி வழங்க வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

## கோவில்களில் முறைகேடா? புகார் அளிக்கலாம்!!

சென்னை, ஜூலை. 03–



அமைச்சர் ரமேஷ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

அன்பிற்குரிய பொது மக்கள் அனைவருக்கும் ஒரு முக்கிய அறிவிப்பு!

தமிழ்நாடு முழுவதும் இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் நடைபெறும் முறைகேடுகள், சட்டவிரோதமாக பணம் பெறுதல், திருக்கோவில்களின் திருப்பணிகள் மற்றும் திருக்கோவில்களின் வேலைவாய்ப்பு போன்றவற்றிற்கு லஞ்சம் பெறுதல் போன்ற குற்றங்களை பற்றி minister_hrce@tn.gov.in என்ற எனது தனிப்பட்ட இ–மெயில் முகவரிக்கு தகுந்த விளக்கம் மற்றும் ஆதாரங்களுடன் புகார்களை அளியுங்கள்.

நானும்எனது அலுவலகமும் நேரடியாக இந்த புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகைகளை செய்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

அண்மையில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் அமைச்சர் ரமேஷ், சாதாரண பக்தரைப் போல முகக்கவசம் அணிந்து அதிரடி ஆய்வு மேற்கொண்டார். அப்போது சிறப்பு தரிசனத்திற்காக அவரிடமே ஊழியர்கள் லஞ்சம் பெற்றதை கையும் களவுமாகப் பிடித்து, சம்பந்தப்பட்ட அர்ச்சகர் மற்றும் பணியாளர்களைப் பணியிடை நீக்கம் செய்து அதிரடி நடவடிக்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு பள்ளிகளில் தூதுவர்களாக செயல்பட முன்னாள் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு அழைப்பு!

சென்னை, ஜூலை. 03–



அரசுப் பள்ளிகளை முன்னேற்றும் சீரிய பயணத்தில் அரசு பள்ளிகளில் தூதுவர்களாக செயல்பட முன்னாள் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு அழைப்பு விடுத்துள்ளது. 26221 முன்னாள் மாணவர்கள் தூதுவர்களாக செயல்பட ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ள னர். தேர்வு செய்யப்படும் தூதுவர்கள் 2 ஆண்டுகளுக்கு பணியாற்ற அனுமதி. குற்ற வழக்குகள் பதிவாகி இருந்தால் அனுமதி இல்லை.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020